2002 அக்டோபர் 30]

ஆலங்குளம் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலங்குளம் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். அதற்கு பதில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதியின் தலைநகரமாகும். மொத்தம் இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள்தான் உள்ளன. இரண்டும் வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகின்றன. ஆகவே, ஆலங்குளத்திற்கும் வி.கே. புதூருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, வரும் நிதியாண்டிலாவது சொந்தக் கட்டடம் கட்டித் தருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் 206 வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்ளன. அதிலே 182 அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் உள்ளன. போடிநாயக்கனூர், தேனி, வேப்பந்தட்டை, பூந்தமல்லி, பள்ளிப்பட்டு மற்றும் கிருஷ்ணராயபுரம் ஆகியவற்றுக்குக் கட்டடம் கட்டுவதற்காக இப்போது பரிசீலனையில் உள்ளது. இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

75—

சமுதாயக் கிணறு

***7882—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருபோகச் சாகுபடி விவசாயிகளுக்கு மழை எதிர்பார்த்து நாற்றங்கால் பாவ, சமுதாயக் கிணறு வெட்டும் திட்டம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒருபோகச் சாகுபடி விவசாயிகளுக்கு மழை எதிர்பார்த்து நாற்றங்கால் பாவ, சமுதாயக் கிணறு வெட்டும் திட்டம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) வினா எழவில்லை.

திரு. ப. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை மற்றும் முல்லை ஆற்றுப் பாசன நிலமுடைய விவசாயிகளுக்கு மழை இல்லாத காலங்களில், அதாவது பருவமழை இல்லாத காரணத்தால் காவிரி ஆற்றுப் பாசன விவசாயிகளைக் காட்டிலும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இருபோக, ஒருபோகச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் சமுதாயக் கிணறு வெட்டித் தரும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு மறுபரிசீலனை செய்யுமா? காவிரி பாசன ஏழை விவசாயிகளுக்கு தீபாவளிப் பரிசு கொடுத்ததைப் போல வைகை, முல்லை ஆற்றுப் பாசன ஏழை விவசாயிகளுக்கும் விவசாயக் கூலிகளுக்கும் தீபாவளிப் பரிசை இதயம் காத்த இதய தெய்வத்தின் அரசு (மணியடிக்கப்பெற்றது) தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் கிணறுகள் அமைக்கும் பணி, வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின்கீழ் மானாவாரி நிலப் பகுதிகளில் 1995 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டு வந்தது. மத்திய அரசினுடைய புதிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் தற்போது ஊராட்சி வளர்ச்சி முகமையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமுதாயக் கிணறு அமைக்கும் பணி இத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு தற்போது நடைமுறையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, திரு. டி. மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.